முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1300

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.04.2023, வெள்ளிக்கிழமை

1. ஞான பிரம்மமே அரங்கா வாழ்க
ஞான சூட்சுமமே தேசிகா வாழ்க
வானவர்கள் மெச்சும் அரங்கனே
வள்ளலே கலியுகத்தின் தவசியே வாழ்கவாழ்க
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 08 ம் நாள், 21.04.2023 வெள்ளிக்கிழமை)
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஊழ் போக்கும் கலியுகத்தில் உண்மை நிறைந்த
உயர் ஞானி அரங்கன் நீயப்பா
3. தாழ் பணிந்து உலகோர் உன் தவபலம்மிக்க
தக்கதொரு கரம்பட தீட்சை பெற்றால்
பெற்றவர்க்கு பிறவி இனி இல்லை
பெற்றதொரு உயர் மாந்தர்கட்கு ஆற்றல்கூடும் அழியாமை தானாகப் பெருகும்
4. பெருகவே இந்த கலியுகத்தில்
பிரம்ம ஞானம் அறிந்த மாதவசி நீ
வரமென உன்வழி உலகோர் தீட்சை
வணங்கி ஏற்றால் அவர்கட்கு இனி பிறவி இல்லை
5. பிறவாத பேற்றை உன் சக்தி கொண்டு உலகுக்கு
பிரணவ சூட்சுமமாக ஆறுமுகன் யான் அருளிவர
சரவணச்சுடரேற்றி உலக மக்கள் சற்குருவே என உன்னை சரணடைந்தால்
தரணியில் அவர்கட்கெல்லாம் ஞானசித்தி தவராஜன் உன்வழிசடுதி உறுதிபட வந்தருளும்

7. அருளவே அரங்கனின் திருபாதம் பற்றி
அகிலத்தார் குருவே என வணங்கி
முழுமைபட ஞானம் பயில
மொழிகுவேன் உலகில் ஞானிகளாகும்

8. ஆகவே மாற்றம் பெறக்கூடும்
அற்புதத்தை அரங்கன் வழி ஆறுமுகன் யான் நடத்திவர
வருகவே உலகோர் குடில் நோக்கி வர
வையகத்தில் மாற்றங்கண்டு சிறப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–